# வடமாமலையும் வானமாமலையும்

எம்.ஏ. மதுசூதனன்

திருமகள் கேள்வனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் தங்கள் ஈரச்சொற்களால் திவ்யதேச எம்பெருமான்களைப் பாடியுள்ளனர். அதில் அதிகமான எம்பெருமான்களைப் பாடியுள்ளவர்கள் திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும்தான். அதில் நம்மாழ்வார் 34 திவ்யதேசங்களைப் பாடியுள்ளார். குறிப்பாக திருமலை, திருமாலிருஞ்சோலை, மலைநாட்டு திருப்பதிகள் போன்ற குறிஞ்சி(மலையும் மலை சார்ந்த இடங்கள்) நிலங்களில் உள்ள பல திவ்யதேசங்களை பாடியுள்ளார். அதிலும் திருமலைக்கும் திருமாலிருஞ்சோலைக்கும் மட்டும் இரண்டு பதிகங்களை சமர்ப்பித்துள்ளார்.

திருவிருத்தம் தொடங்கியவுடன் "காண்கின்றங்களும்....தண் மாமலை வேங்கடத்தும்பர் நம்பும் சேண்குன்றம் சென்று" என்று திருமலையை மங்களாசாசனம் செய்தார். திருவாய்மொழியிலும் பலவிடங்களில் திருமலையப்பனை அனுபவிக்கிறார். தம்முடைய சரணாகதியையும் (உலகமுண்ட), கைங்கர்ய மனோரதத்தையும் (ஒழிவில் காலமெல்லாம்) திருமலையப்பனிடம் செய்தார். ஆழ்வாருக்கு மிகவும் இஷ்டமான தெய்வம் திருவேங்கடமுடையான் என்றால் அது மிகையாகாது. (மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த திருமங்கையாழ்வார் திருமலையை வடமாமலை என்று அருளிச்செய்துள்ளார்.)

வடமாமலையான திருமலையைப் போலவே நம்மாழ்வாருக்கு மற்றொரு இஷ்டமான தெய்வம் உண்டென்றால் அது வானமாமலை எம்பெருமான் தான். திருமலை எம்பெருமானுக்கும் வானமாமலை எம்பெருமானுக்கும் ஒரு சிறு வித்தியாசம் தான். திருமலை எம்பெருமான் திருமாலை மீது எழுந்தருளியுள்ளான். வானமாமலை எம்பெருமான் மலையாகவே எழுந்தருளியுள்ளான். இந்த இரண்டு ஸ்வயம் வ்யக்தக்ஷேத்ர எம்பெருமான்களையும் நம்மாழ்வார் எப்படி அனுபவிக்கிறார் என்று சிறிது பார்ப்போம்!

திருவாய்மொழிக்கு "தீர்க்க சரணாகதி" என்று ஆசார்யர்கள் பெயர் சூட்டியுள்ளனர். அதாவது திருவாய்மொழி ஒரு சரணாகதி சாஸ்த்ரம் என்றபடி. அதில் முக்கியமான சரணாகதிகளான "நோற்ற நோன்பிலேன்" என்கிற பதிகம் வானமாமலை எம்பெருமானிடமும் "உலகமுண்ட பெருவாயா" என்கிற பதிகம் திருவேங்கடமுடையானிடமும் ஆழ்வார் செய்தது குறிப்பிடத்தக்கது. இந்த இரு எம்பெருமான்களிடம் ஏன் சரணாகதி செய்தார் என்று ஆராய்ந்தால் நமக்கு ஒரு விஷயம் புலப்படும். கீதாசார்யன் கீதையின் 18வது அத்தியாயத்தில் 66ம் ஸ்லோகத்தில் இந்த சரணாகதியை நமக்கு விதித்தான். "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:" என்கிற அந்த சரம ச்லோகத்தில் "எல்லா தர்மங்களும் உபாயம் என்கிற நினைவை விட்டு என்னுடைய திருவடியைப் பற்று; உன்னுடைய அனைத்து பாபங்களில் இருந்தும் விடுவித்து முக்தனாக ஆக்குகிறேன் கவலைப் படாதே" என்று அருளிச்செய்கிறான். இந்த இரு எம்பெருமான்களும் அர்ச்சாவதாரத்தில் ஒருவர் நின்றநிலையிலும் மற்றொருவர் வீற்றிருந்த நிலையிலும் எழுந்தருளியிருந்தாலும், இருவருமே சரம ச்லோகத்தின் அர்த்தத்தை நமக்கு உணர்த்தும் விதமாக எழுந்தருளியுள்ளமை, ஒரு ஆச்சரியமான ஒற்றுமை. இவர்கள் இருவரும் வலது திருக்கரத்தை திருவடியை காட்டிக் கொண்டும் இடது திருக்கரத்தை திருத்துடையை தொட்டுக்கொண்டும் எழுந்தருளியுள்ளனர். வலது திருக்கரத்தி னால் சரமச்லோகத்தின் முதல் பாதியான 'மாம் ஏகம்

சரணம் வ்ரஜ' என்பதை நமக்கு உணர்த்துகிறான். இடது கரத்தினால் சரமச்லோகத்தின் இரண்டாம் பாதியான மோக்ஷயிஷ்யாமி என்பதை உணர்த்துகிறான். இடது கரத்தினால் திருத்துடைகளை தொட்டு கொண்டு இருப்பது நம்முடைய சம்சார சாகரத்தை வற்றடித்து முழங்கால் அளவுக்கு ஆக்கிவிடுவதை உணர்த்துகிறது. ஆக, இரு எம்பெருமான்களும் சரமச்லோகத்தை உணர்த்தும் விதமாக எழுந்தருளியுள்ள காரணத்தால் தான் ஆழ்வார் இவர்களிடம் சரணாகதி செய்தாரோ என்று வியக்க தோன்றுகிறது!

சரணாகதி என்றவுடன் நமக்கு நினைவில் வருவது மந்த்ர ரத்னமான த்வயம் தான். த்வயத்தின் பூர்வவாக்யத்தால் உபாயமும் உத்தர வாக்யத்தால் உபேயமும் தெரிவிக்கப்படுகிறது. தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறியான ஈடு முப்பத்தாறாயிரப்படி அவதாரிகையில் திருவாய்மொழி ஆயிரமும் த்வயத்தை எப்படி விவரிக்கின்றது என்று காட்டியுள்ளார்.

திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களும் த்வயத்தை விவரிப்பதாக இருந்தாலும், இந்த இரண்டு திவ்யதேசத் திருவாய்மொழிகளில் த்வயத்தினுடைய அர்த்தங்களை ஆழ்வார் ஸ்பஷ்டமாக காட்டியுள்ளார். திருவேங்கடப் பதிகமான "உலகமுண்ட பெருவாயா" பதிகத்தில் "அகலகில்லேன் இறையுமென்று... உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்கிற பாசுரத்தில் தம்முடைய ஆகிஞ்சன்யம் அநந்யகதித்வம் ஆகியவைகளை அனுஷ்டித்துக்கொண்டு எம்பெருமானுடைய சரண்ய குணங்களையும் அனுசந்தித்துக் கொண்டு பிராட்டி புருஷகாரமாக சரணாகதி செய்தார். அந்தப்பாசுரம் த்வயத்தின் பூர்வ வாக்யத்தினுடைய விவரணமாக அமைந்துள்ளது. "ஒழிவில் காலமெல்லாம்" என்கிற மற்றொரு திருவேங்கடப்பதிகத்தில் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே" என்கிற பாசுரத்தில் அவன் திருவடிகளில் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் குற்றமற்ற கைங்கர்யம் செய்யப் பாரித்து த்வயத்தின் உத்தர வாக்கியத்தின் விவரணத்தை நமக்கு காட்டியுள்ளார். அதே போல், "நோற்ற நோன்பிலேன்" என்கிற வானமாமலைப் பதிகத்திலும் சில பாசுரங்களில் த்வயத்தின் அர்த்தங்களை ஸ்பஷ்டமாக அருளிச் செய்துள்ளார். "ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று பூர்வ வாக்கியத்தின் ஸாரமான உபாய வைபவத்தை யும் "வானமாமலையே அடியேன் தொழ வந்தருளே" என்று உத்தர வாக்கியத்தின் சாரமான உபேய வைபவத்தையும் ஸ்பஷ்டமாகக் காட்டியுள்ளார்.

திருவேங்கடமலை, வானமாமலை எம்பெருமான்களிடத்தில் ஆழ்வார் சரணாகதி செய்தார். இரு எம்பெருமான்களை அனுபவிக்கும் போதும் ஒரு சிறப்பான ஒற்றுமையோடு அனுபவித்தார். வானமாமலைப் பதிகத்தின் இறுதிப்பாசுரத்தில் "தெய்வநாயகன் நாரணன் திரிவிக்கிரமன்" என்றும், ஒழிவில் காலமெல்லாம் பதிகத்தின் இறுதிப் பாசுரத்தில் "தாள்பரப்பி மண் தாவிய ஈசன்" என்றும் இரு எம்பெருமான்களையும் திருவிக்கிரமனாக அனுபவித்தது ஒரு ஆச்சரியமான ஒற்றுமை.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த ஆசார்ய ஹ்ருதயத்தில் நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்த திருப்பதிகள் ஒவ்வொன்றிலும் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களுக்கு ஒவ்வொரு திருக்கல்யாணகுணம் மற்ற குணங்களைவிட அதிகமாக ப்ரகாசிப்பதாக ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே காட்டுகிறார். அந்த க்ரமத்தில் திருவேங்கமுடையானிடத்தில் வாத்ஸல்யமும் வானமாமலை எம்பெருமானிடத்தில் ஔதார்யமும் பிரகாசிப்பதாக காட்டியுள்ளார். வாத்ஸல்யம் என்பது தாய்ப்பசுவுக்கு கன்றின் மீது உள்ள அன்பு. திருவேங்கமுடையான் ஆழ்வார் திறத்திலும் அடியவர்கள் திறத்திலும் மிக்க அன்போடு விளங்குகிறான். ஔதார்யமாவது

தன்னிடத்தில் உள்ள வஸ்துக்களை இன்னார் என்று பாராமல் அனைவருக்கும் வாரி வழங்கும் வள்ளல் தன்மை. மேலெழப்பார்க்கையில் இவையிரண்டும் வெவ்வேறு குணங்கள் போல் தோன்றினாலும் இவ்விரண்டு குணங்களும் ஒன்றுக்கொன்று நெருங்கியவைகளேயாம். லௌகீகத்தில், நாம் ஒருவரிடத்தில் மிகுந்த அன்பு செலுத்துகிறோம். அந்த அன்பின் காரணமாக நம்முடைய வஸ்துக்கள் பலவற்றையும் அவர்களுக்கு கொடுக்கின்றோம். ஆக, ஒருவரிடத்தில் உள்ள வாத்ஸல்யத்தின் காரணமாகவே ஔதார்யம் பிறக்கிறதை கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆக வாத்ஸல்யமும் ஔதார்யமும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடைய குணங்களாக விளங்குகின்றன.

இந்த லோகத்தில் பரம உதாரர்கள் என்று நாம் சிலபேர்களை பார்க்கிறோம். ஆனால் எம்பெருமானுடைய படி மிகவும் விலக்ஷணமானது. கீதையில் கண்ணபிரான் தன்னை வந்தடையும் அதிகாரிகளை பற்றி கூறும் போது "சதுர்விதா பஜந்தே மாம் ஜனா: ஸுக்ருதினோ(அ)ர்ஜுன ஆர்தோ ஜிஜ்ஞாஸு: அர்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப" என்று நான்கு விதமாகக் கூறினான். புதிதாக செல்வம் வேண்டுபவன், இழந்த செல்வத்தை வேண்டுபவன், கைவல்யத்தை வேண்டுபவன் மற்றும் எம்பெருமானையே வேண்டுபவன் என்று நான்கு விதமானவர்கள் தன்னை அடைகிறார்கள் என்றான். அப்படிச் சொன்னவன் அடுத்த ஸ்லோகத்திலேயே "உதாரா: ஸர்வ ஏவைதே" என்று அவர்கள் எல்லோரும் உதாரர்கள் என்றான். பொதுவாக கொடுப்பவரை உதாரர் என்று சொல்லுவோமே தவிர கேட்பவர்களை யாரும் உதாரர்கள் என்று சொல்ல மாட்டோம். ஆனால், எம்பெருமானுடைய ஔதார்யம் எப்படிப்பட்டதென்றால் கேட்பவர்களை உதாரர்கள் என்று சொல்லும் அளவுக்கு சிறப்பு வாய்ந்தது. தாழ்ந்த விஷயங்களைக் கேட்டாலும் அதை மற்ற தேவதைகளிடம் கேட்காமல் தன்னிடம் வந்து கேட்டு தன்னை உதாரனாக்கிய உதாரர்கள் என்று அவன் கொண்டாடுகிறான். நம்மாழ்வார் திருவேங்கடமுடையானை அனுபவிக்கும் போது "எற்பரன், என்னை ஆக்கிக்கொண்டு, எனக்கே தன்னைத்தந்த கற்பகம், என்னமுதம், கார்முகில் போலும் வேங்கடநல்வெற்பன்" என்று அருளிச் செய்தார். எம்பெருமானை பரம உதார வஸ்துக்களான கார்முகிலாகவும் கற்பகமாகவும் அனுபவிக்கிறார். ஆனால் தேவலோக வ்ருக்ஷமான கற்பகமரத்திற்கும் எம்பெருமானுக்கும் உள்ள வேறுபாட்டை அழகாக காட்டுகிறார். கற்பகமரம் நாம் கேட்கின்ற சில வஸ்துக்களைத் தருமேயல்லாது தன்னைத்தராது. ஆனால் எம்பெருமானாகிய கற்பகம் தன்னையே கொடுக்கும் கற்பகவ்ருக்ஷம் என்று ஆழ்வார் காட்டியுள்ளார். அந்த கற்பகமும் வேங்கட வெற்பின் மேல் உள்ளது என்றும் காட்டியுள்ளார்.

ஆழ்வார் திருவேங்கமுடையானைப் பாடும் போது அவனுடைய பரத்வத்தையும் எடுத்துக் கழித்து "ஈசன் வானவர்க்கு என்பன் என்றால் அது தேசமோ திருவேங்கடத் தானுக்கு? நீசனேன் நிறைவு ஒன்றும் இலேன் என்கண் பாசம் வைத்த பரம் சுடர்ச்சோதிக்கே" என்று ஸௌலப்ய குணத்தையே அனுபவித்துப் பாடினார். அதே போல் வானமாமலை எம்பெருமானைப் பாடும் போதும் "வந்தருளி என்னெஞ்சிடங்கொண்ட வானவர் கொழுந்தே" என்று அவன் பரமபதத்தையும் விட்டு ஓடிவந்து தம் மனக்கடலில் வாழவந்த ஸௌலப்ய குணத்தையே அனுபவித்துப் பாடினார்.

இந்த இரு எம்பெருமான்களையும் ஆழ்வார் கார் முகில்களாக அனுபவித்து பாசுரங்கள் பாடியுள்ளனர். திருமலை எம்பெருமானை "அந்தமில் புகழ் காரெழில் அண்ணலே" என்றார். வானமாமலை எம்பெருமானைப் பாடும் போதும் "கருள புட்கொடி சக்கரப்படை வானநாட! எங்கார்முகில் வண்ணா" என்று ஸௌலப்ய குணங்கள் தோற்ற எழுந்தருளியுள்ளமையைப் பாடி மகிழ்ந்தார்.

இந்த இரண்டு திவ்யதேசங்களை ஆழ்வார் ஒன்றுபோல அனுபவித்ததை

அனுபவித்தோம். அதற்கும் மேல் இந்த திவ்யதேசங்களில் பல அனுஷ்டானங்களும் ஒன்றாக அமைந்திருக்கும் ஆச்சரியத்தைச் சிறிது பார்ப்போம். இரண்டு திருக் கோயில்களுக்கும் நிர்வாஹகராக ஜீயர் ஸ்வாமிகள் எழுந்தருளியுள்ளனர். திருமலையில் கோயில் கேள்வி அப்பன் ஜீயர் ஸ்வாமிகளின் நிர்வாஹமும் வனமாமலையில் வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகளின் நிர்வாஹமும் விளங்குகின்றது. அதில் மற்றுமொரு விசேஷம், திருவேங்கட ராமானுஜ ஜீயர் எம்பெருமானாருடைய சிஷ்யராக விளங்கியவர். பொன்னடிக்கால் ஜீயர் மணவாள மாமுனிகளுக்கு சிஷ்யராக விளங்கியவர். திருமலையில் அனுதினமும் திருப்பாவை சாற்றுமுறை ஆனவுடன் எம்பெருமானார் சந்நிதியில் பிரத்யேகமாக திருப்பாவை சாற்றுமுறை நடைபெறுகிறது. அதே போல் வானமாமலை சந்நிதியிலும் அனுதினமும் மணவாள மாமுனிகள் சந்நிதியில் திருப்பாவை சாற்றுமுறை நடைபெறுகிறது.

மேலும், இந்த இரண்டு திவ்யதேசங்களிலும் சிறப்பு வாய்ந்த ஒரு ஆசார்யர் பரம விலக்ஷணமான கைங்கர்யத்தை செய்துள்ளதும் ஒரு அழகான ஒற்றுமை ஆகும். எம்பெருமானார் நியமனமடியாக திருமலைக்குச் சென்று திருமலையப்பனுக்கு வழுவிலா அடிமை செய்தார் திருமலை அனந்தாழ்வான். அவர் திருமலையில் எம்பெருமானருக்கு திருவடி நிலைகளாக இன்றைக்கும் சேவை சாதிக்கிறார். மணவாள மாமுனிகள் அந்தரங்க சீடரான பொன்னடிக்கால் ஜீயர் வானமாமலை எம்பெருமானுக்கு அந்தரங்க கைங்கர்யம் செய்து வந்தார். அவரோ எல்லா திவ்யதேசங்களிலும் மாமுனிகள் திருவடி நிலைகளாக நமக்கு சேவை சாதிக்கிறார். இருவரும் அத்யந்த ஆசார்ய நிஷ்டர்களாய் விளங்கியதும் குறிக்கொள்ளத்தக்கது.

இந்த இரு ஆசார்யர்களுக்கும் மேலும் ஒரு ஒற்றுமை உள்ளது. இருவரும் அந்தந்த ஸ்தலத்தில் பிராட்டிக்கு திருதகப்பனாராக விளங்குகின்றனர். திருமலை அனந்தாழ்வான் "மலையில் வேங்கடவர்க்கு மாமனார் வழியே" என்றபடியும் "அலர்மேல் மங்கை திருவுக்கு அப்பனார் வாழியே" என்றபடியும் அகலகில்லேன் இறையுமென்று உள்ள அலர்மேல்மங்கை நாச்சியாருக்கு திருத்தகப்பானார் ஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளார். பொன்னடிக்கால் ஜீயரும் விபவத்தில் திருப்பதிக்குச் சென்று அங்கே சீவரமங்கை நாச்சியாரை கண்டெடுத்து வானமாமலை எம்பெருமானிடம் சமர்ப்பித்ததால் பிராட்டிக்கு திருதகப்பனார் ஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளார். இந்த இரு ஆசார்யர்களும் வருடத்தில் ஒரு முறை அந்தந்த திவ்யதேச எம்பெருமானுக்கு மாப்பிள்ளை சம்பாவனை சமர்ப்பிப்பது இன்றும் வழக்கத்தில் உள்ளது. திருமலையில் அனந்தாழ்வான் பரமபதித்த தினமான திருவாடிப்பூரத்தன்று திருமலையப்பன் அனந்தாழ்வான் தோட்டத்திற்கு எழுந்தருளி மண்டகப்படி கண்டருளி மரியாதைகள் சாதிக்கிறான். அதே போல் பொன்னடிக்கால் ஜீயர் திருநக்ஷத்திரமான கன்னி புனர்வசு அன்றைய தினம் வானமாமலை எம்பெருமான் மடத்திற்கு எழுந்தருளி மண்டகப்படி கண்டருளி மரியாதைகள் சாதிக்கிறான். அனந்தாழ்வான் திருவரசு அமைந்திருக்கும் தோட்டத்திற்கு எழுந்தருளி திருமலையப்பன் ஸ்ரீசடகோபன் மரியாதைகள் செய்வது போலவே, பொன்னடிக்கால் ஜீயர் திருவசுக்கும் ஸ்ரீசடகோபன் எழுந்தருளி மரியாதை ஸாதிக்கும் உத்ஸவமும் வானமாமலையில் நடைபெறுகிறது.

மேலும், இரண்டு திவ்யதேசங்களுக்கும் புரட்டாசி மாதம் முக்கியமான மாதமாக விளங்குகின்றது. "காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர ஓணவிழவிலொலியதிர" என்றபடி உலகப்புகழ் வாய்ந்த திருமலை ப்ரஹ்மோத்சவம் இந்த மாதம் நடைபெறுகிறது. சீவரமங்கலநகரிலும் புரட்டாசி மாதம் பொன்னடிக்கால் ஜீயரின் திருநக்ஷத்திரம் புனர்வசு நக்ஷத்திரத்தில் பூர்த்தியாகும்படி பத்து நாள்கள் விமரிசையாக நடைபெறுகிறது. இந்த புரட்டாசி மாதம் இந்த இரு திவ்யதேச எம்பெருமான்களின் வைபவத்தை சிந்தித்து ஸத்தை பெறுவோமாக!